பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ மார்கழி மீ 13 உ. வெள்ளிக்கிழமை (28-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 32

## அகோர விமானக் குண்டு வீச்சின் மத்தியில்

# ஆனையிறவு பகுதியில் நேற்று கடும் சண்டை!

## எட்டுப் படையினர் பலி; பலர் காயம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 28

அகோர விமானக் குண்டு வீச்சுகளுக்கு மத்தியில் நேற்று ஆனையிறவுப் பகுதியில் கடும் சண்டை நடைபெற்றது. இந்தச் சண்டையில் எட்டுச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமுற்றனர்.

நேற்றுக்காலையில் சுமார் 8 மணிமுதல் 10-30 மணி வரை மாறி, மாறி வந்த ஒரு அவ்ரோ மற்றும்மூன்று குண்டு வீச்சு விமானங்கள் ஆனையிறவு முகாமைச் சுற்றியுள்ள பற்றைக் காடுகள், வெட்ட வெளிப் பிரதேசம் ஆகியவற்றின் மீது இருபத்தைந்துக்கும் அதிகமான குண்டுகளை வீசின.

விமானக் குண்டுவீச்சை ஒரு புறம் நடத்திக்கொண்டு — மறுபுறத்தில் முகாமிலிரு

[2ஆம் பக்கம் பார்க்க]

## இருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச.28

ஆனையிறவில் நேற்று இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

மாறன் (சவரிமுத்து அமலதாஸ்- வட்டக்கச்சி), செம்பவளம் (செல்லத்துரை யாழ் இன்பராசா- துணுக்காய்) ஆகியோரே வீரமரணமடைந்தனர். (உ-5)

## அழுதுவடியும் பலகார அலுமாரிகள்

யாழ்ப்பாணம், டிச.28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சந்திகள், சந்தைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் உள்ள சாப்பாட்டுக் கடைகள் மற்றும் தேநீர்க் கடைகளில் பலகார அலுமாரிகள் இப்போது வெறுமனே பரிதாபமாகக் காட்சி அளிக்கின்றன!

உணவுப்பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் விளைவு அந்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## அவ்ரோ, பொம்மர்கள் கட்டுவனில் தாக்கு!

காங்கேசன்துறை, டிச. 28

கட்டுவன், வீமன்காமம் பகுதியில் நேற்றுமாலை இரண்டு தடவைகள் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

பிற்பகல் 3.30 மணியளவில் வலிகாமம் வடக்குப் பகுதியை வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் கட்டுவன் மினி இராணுவ முகாம் சுற்றாடலிலும் வீமன்காமத்திலும் குண்டுகளை வீசின.

இதனால் இப்பகுதிகளில் பல வீடுகள் மற்றும் சட்டடங்கள் சேதமுற்றன.

ஏற்கனவே இப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து விட்டிருந்ததால் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நேற்றுமாலை

[2ஆம் பக்கம் பார்க்க]

## வளலாய்ப் பகுதியில் நேற்று

## ஹெலியிலிருந்து கிரனேட் தாக்கு!

யாழ்ப்பாணம், டிச. 28

வளலாய், இடைக்காடு, பத்தமேனி, அச்சுவேலி, ஒட்டகப்புலம் ஆகிய பகுதிகளில் குடியிருப்புகளை நோக்கி நேற்றுக் காலை 6-30 மணி முதல் சுமார் அரைமணி நேரம் ஹெலிக்கொப்டர் ஒன்று கலிபர் தாக்குதலை நடத்தியது. இடையிடையே கிரனேட்டுகளும் வீசப்பட்டன.

இந்தத் தாக்குதலினால் வீடுகள் சில சேதமுற்றன. மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்து கொண்டதால், இழப்புகள் தவிர்க்கப்பட்டன. [உ-15]

## முல்லைத்தீவிலும் நேற்று மோதல்!

யாழ்ப்பாணம், டிச. 28

நேற்று அதிகாலை 4 மணி முதல் சுமார் நான்கு மணி நேரம் முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியில் கடும் சண்டை நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இந்த மோதல்களின்போது படையினருக்கு பெரும்சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை முதல் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## தி. மு. க. தலைமையிலான

## பாண்டிச்சேரி அரசு நேற்று இராஜினாமா!

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் நேற்று இராஜினாமாச் செய்தார்.

அமைச்சரவையின் இராஜினாமாக் கடிதத்தை அவர் பாண்டிச்சேரி ஆளுநர் ஹரிஸ்வரூப் சிங்கிடம் கையளித்தார்.

சட்ட சபை சபாநாயகரிடம் இருந்து தாம் நீதியை எதிர்பார்க்க முடியாது என்று திரு. இராமச்சந்திரன் தனது இராஜினாமாக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இதனால் தி. மு. க. அரசு கொண்டு வந்த நம்பிக்கைப் பிரேரணையை விவாதிக்க நேற்றுக் காலை கூடிய சட்ட சபையின் சிறப்புக் கூட்டம் நான்கு நிமிடங்களில் முடிந்தது.

ஆளும் தி. மு. க. வைச்

(2ஆம் பக்கம் பார்க்க]

## எக்ஸ்றே கருவி பழுது; நோயாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 28

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் உள்ள கதிரியக்கப் படக் [எக்ஸ்றே] கருவிகளில் இப்போது ஒன்றே ஒன்றுதான் இயங்குகிறது.

அதனால் நோயாளர் பலர், குறிப்பாக ''கிளினிக்''குகளில் சிகிச்சை பெறுவோர் எக்ஸ்றே படம் பிடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

இயங்கும் நிலையில் உள்ள எக்ஸ்றே கருவி அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் ''வார்ட்'' நோயாளரின் படங்களை எடுப்பதற்கு மட்டுமே பயன் படுத்தப்படுகிறது.

பழுதடைந்த நிலையில் உள்ள கருவிகளில் சிலவற்றை திருத்தும் வேலையில் உள்ளூர் பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். [அ-15]

## பூநகரியிலும் நேற்று ஹெலித் தாக்குதல்!

ஆனையிறவில் நேற்றுக் காலை கடும் மோதல் நடந்து சில மணி நேரங்களின் பின்னர், ஹெலிக்கொப்டர் ஒன்று ஆனையிறவைச் சூழ உள்ள பல இடங்களிலும், பூநகரிப் பகுதியிலும் கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதனால் பூநகரிப் பகுதி சிறிது நேரம் அல்லோல கல்லோலப் பட்டதாகவும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியதாகவும் கூறப்பட்டது. [உ-6]

## வயோதிபர் சுட்டு கொலை

யாழ்ப்பாணம், டிச. 28

மட்டக்களப்பு மாவட்டம் மகிழடித்தீவில் கடந்த சனியன்று மயில்வாகனம் பொன்னம்பலம் [வயது 65 – ஆரையம்பதி] என்ற வயோதிபர் ரெலோ உறுப்பினர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச.28

கடந்த செவ்வாய்-நத்தார் தினத்தன்று- அம்பாறை பாளையடிவெட்டை என்ற இடத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி பொதுமக்கள் இருவர் காயமுற்றனர். [உ]

## நால்வர் கொலை!

யாழ்ப்பாணம், டிச. 28

கடந்த புதனன்று மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர்.

வெல்லாவெளியைச்சேர்ந்த மகாலிங்கம், விஸ்வலிங்கம் ஆகியோரும் மற்றும் இருவருமே இவ்வாறு உயிரிழந்தனர். [உ-5]

## வேலணை, அராலித்துறையில் நேற்று விமானக் குண்டுவீச்சு!

### செட்டிபுலம் ஐயனார் கோயில் சேதம்

யாழ்ப்பாணம், டிச. 28

அராலித்துறை, வேலணைப் பகுதிகளில் நேற்று விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அராலித்துறையில் இரண்டு பொம்மர்கள், இரண்டு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இதேவேளை —

நேற்றுநண்பகல் 11.45மணியளவில் வேலணைப் பகுதியை சுற்றி வட்டமிட்ட இரு குண்டு வீச்சு விமானங்கள் வேலணை செட்டிபுலம், பள்ளிவாசல் பகுதிகளில் ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளை வீசின.

இந்தத் தாக்குதலினால் வேலணை செட்டிபுலம் ஐயனார் கோவில் முற்றாகச் சேதமடைந்தது.

பள்ளிவாசலுக்கு அருகாமையில் விழுந்த குண்டினால் வீடு ஒன்று பலத்த சேதம் அடைந்தது.

பள்ளிவாசல் கடற்கரைப் பிரதேசத்தில் கட்டப்பட்டிருந்த படகுகளை நோக்கியும் பொம்மரிலிருந்து றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் படகுகளுக்கு பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. [உ-167-5]

## யுத்த நிறுத்தம் குறித்து தெரியாது என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, டிச. 28

எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று போர் நிறுத்தம் செய்யப்போவதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பது குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது.

விடுதலைப் புலிகளுடன் நாம் பேச்சுவார்த்தையும் நடத்தப்போவதில்லை.

இவ்வாறு பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா, அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புதுவருடத்துடன் யுத்த நிறுத்தம் என்ற கிட்டுவின் பெயரில் ஏ.எவ்.பி செய்தி ஸ்தபானம் நேற்று செய்தி வெளியிட்டது என்பதும்—

அந்தச் செய்தியை விடுதலைப் புலிகள் வார்ஜிதப் படுத்தவில்லை என்பதும் தெரிந்ததே. (அ-உ-எ)

## யாரிடம் நாம் உதவி பெறுவது என்பதை

# இந்தியா எமக்குக் கூறத்தேவையில்லை!

### சுக்லாவுக்கு வெளியுறவு அமைச்சர் ஹேரத் பதிலடி

கொழும்பு, டிச. 28

எந்த நாட்டிடமும் இருந்து உதவி பெற எமக்கு உரிமை உண்டு. யாரிடமிருந்து உதவி பெறுவது என்பது பற்றி எமக்கு வேறு எவரும் சொல்லத் தேவையில்லை—

இவ்வாறு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு பதிலடி கொடுத்திருக்கிறார் ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்.

இலங்கை விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதை இந்தியா அனுமதிக்காது என்று வெளியுறவு அமைச்சர்வித்யாசரண் சுக்லா அண்மையில் கூறியிருந்தார் அல்லவா!

அதற்கே அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் பதிலடி கொடுத்திருக்கிறார்.

அமைச்சர் ஹேரத் மேலும் கூறியிருப்பதாவது:-

இலங்கைக்கு எதிராக போராளிகள் இயங்குவதற்கு இந்திய மண்ணில் இடமளிக்கப்படமாட்டாது என்று அமைச்சர் சுக்லா கூறியிருக்கிறார். அதற்கு நன்றி கூறுகிறோம்.

[2ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா ஊடாக சென்று வர அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 28

வவுனியா ஊடாக பயணிகள் சென்று வருவதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து கொழும்பிலிருந்து வந்த சுமார் 300 பயணிகள் நேற்று நள்ளிரவு யாழ். வந்து சேர்ந்தனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் வவுனியாவில் தரித்து நின்ற சில லொறிகளும் நேற்று வடக்கே வர அனுமதிக்கப்பட்டன.

இதனையடுத்து உணவுப் பொருள்களின் விலை வடக்கில் குறையுமென எதிர்பார்க்கப்பட்டது. [உ-5]

## கருணாநிதி சொல்கிறார்:

# சிங் காலத்திலேயே போராளிகள் கைது!

சென்னை, டிச. 28

சந்திரசேகர் அரசு பதவிக்கு வருவதற்கு முன்னரே இலங்கைத் தமிழ்ப் போராளிகள் மீதான நடவடிக்கையை தமிழக அரசு ஆரம்பித்துவிட்டது.

முதலமைச்சர் கருணாநிதி இப்படித் தெரிவித்தார்.

வி. பி. சிங் அரசு பதவியில் இருந்த காலத்திலேயே தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழ்ப்போராளிகள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

சந்திரசேகர் அரசு பதவிக்கு வந்த பின்னர்தான் தமிழக அரசு போராளிகளைக் கைது செய்து வருவதாகக் கூறப்படுவது தவறு என்றும் திரு. கருணாநிதி மேலும் சொன்னார். [அ-எ]

# குரங்கு கடித்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், டிச. 28

வளர்த்த குரங்கு திடீரென ஆவேசத்துடன் பாய்ந்து வீட்டுக்காரச் சிறுவனின் கையைக் கடித்துக் குதறியது.

இந்தச் சம்பவம் நேற்று நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்றது.

பத்மநாதன் செந்தூரன் (வயது 12) என்ற சிறுவனே காயமுற்றவராவார். [உ-15]

# இந்திய லோகசபையில் நேற்று அமளி துமளி!

இந்திய லோக சபையின் குளிர்கால கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானவுடன் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது,

பிரதமர் சந்திரசேகர் தனது அமைச்சர்களை ஒவ்வொருவராக சபைக்கு அறிமுகப்படுத்திய போது இந்த அமளி ஏற்பட்டது.

முன்னாள் அமைச்சர் பேராசிரியர் மதுதண்டவதே எழுந்து, இந்த அரசு சட்டபூர்வமானதா என்று கேள்வி எழுப்பினார்.

சபையின் நடுப்பகுதிக்குச் சில எதிர்க்கட்சி எம். பிக்கள் சென்று குரல் எழுப்பினர். பின்னர் தரையில் அமர்ந்து கொண்டனர்.

இதனால் சபையை சற்று நேரத்துக்கு சபாநாயகர் ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. (உ-எ)

# தமிழக அரசை கலைக்க ஜெயலலிதா வற்புறுத்து

தமிழக அரசைக் கலைக்கும்படி அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று மாநில ஆளுநர் பர்னாலாவைச் சந்தித்து கோரினார்.

பின்னர் செய்தியாளர் மத்தியில் ஜெயலலிதா பேசினார்:

புதுடில்லிக்கு வெள்ளிக்கிழமை சென்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியையும் ஜனாதிபதி வெங்கட்ராமனையும் தமிழக அரசு கலைப்பு சம்பந்தமாக சந்தித்துப் பேசவிருப்பதாகவும் ஜெயலலிதா சொன்னார். (உ-எ)

# புதுவையில் காங்கிரஸ் புதிய அரசு அமைக்கும்!

புதுச்சேரி, டிச. 28

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் புதிய அரசாங்கத்தை அமைக்க இந்திரா காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் எம். ஓ. எச். மரைக்காயரை ஆளுநர் அழைக்க இருக்கிறார்.

சபையில் மிகப்பெரும்பான்மைக் கட்சியாக இந்திரா காங்கிரஸ் இருப்பதால் அதனை அழைக்க தான் தீர்மானித்திருப்பதாக ஆளுநர் சொன்னார்.

இதேவேளை—

காங்கிரஸ் கட்சி அரசமைக்க விரும்பினால் அதற்கு அ. தி. மு. க ஆதரவு கொடுக்கும் என்று அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

புதிதாக சட்டசபைத் தேர்தல் நடைபெறுவதையேதான் விருப்புவதாகவும் அவர் சொன்னார். (உ-எ)

## பங்களாதேஷ் தேர்தல்:

# 3இடங்களில்போட்டியிட ஜெனரல் எர்ஷாத் முடிவு

டாக்கா, டிச. 28

பதவி விலகிய பங்களாதேஷ் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் அடுத்த பெப்ரவரியில் நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் மூன்று தொகுதிகளில் போட்டியிட இருக்கிறார்.

டாக்காவில் இரு தொகுதிகளிலும் தனது சொந்த நகரிலும் அவர் போட்டியிடுவார்.

தற்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் எர்ஷாத், இது தொடர்பாக தனது ஜாதிய கட்சிப் பிரமுகர்களுடன் இரகசிய ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை-

எர்ஷாத்தின் அமைச்சரவையில் பதவி வகித்த நான்கு முன்னாள் அமைச்சர்களை கைது செய்ய டாக்கா நீதிமன்றம் ஒன்று பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது. [உ-எ]

# அடுத்த மாதம் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 28

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

கொழும்பில் நடைபெற்ற பரீட்சைகளில் தோற்றியவர்கள் தவிர்ந்த, மற்றவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் கிடைத்ததும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கல்வித்துணை அமைச்சர் திருமதி ராஜமனோகரிபுலேந்திரன் இந்தப் பரீட்சையை இங்கு நடத்த ஏற்பாடு செய்திருந்தார். [அ-3]

# முதலில் தோல்வி பின்னரே வெற்றி

மாஸ்கோ, டிச. 28

சோவியத் உப ஜனாதிபதி பதவிக்கு ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவால் நிறுத்தப்பட்ட திரு. யனயேவ்வை சோவியத் நாடாளுமன்றம் இரண்டாவது வாக்கெடுப்பின்போதே அங்கீகரித்தது.

முதலாவது வாக்கெடுப்பில் இந்த நியமனத்தை நாடாளுமன்றம் நிராகரித்து இருந்தது.

முதலாவது வாக்கெடுப்பில் அவரின் நியமனத்தை ஆதரித்து 50 சதவீதத்திற்கு மேற்பட்ட எ. பி. க்கள் வாக்களிக்கத் தவறியதே இதற்குக் காரணம். [அ-எ]

# அழுது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலுமாரிகளின் வெறுமையில் தெரிகிறது.

முன்னர் காலை முதல் இரவுவரை பண்டங்கள் முடிய முடிய, அவை சுடச்சுட வந்து நிறையும் அந்தப் பலகார அலுமாரிகள்இப்போது அங்கு போகும் வாடிக்கையாளரைப் பார்த்து அழுதுவடிகின்றன.

பல தேநீர்க் கடைகளும், சாப்பாட்டுக் கடைகளும் நண்பகல் ஆவதற்கு முன்னரே மூடப்பட்டு விடுகின்றன;

பலகாரம் போட உணவுப் பொருள்கள் இல்லை. தேங்காய் எண்ணெய் உச்சவிலை. சீனி கிடைப்பதில்லை. நாம் என்ன செய்வது-என்று கடை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். [அ-31]

# பாண்டிச்சேரி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த எம். எல். ஏ. க்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இந்திரா காங்கிரஸ், அ. தி. மு. க. உட்பட எதிர்க்கட்சி எம். எல். ஏ. க்கள் 18 பேர் சபையில் சமூகமளித்திருந்தனர்.

புதிய அரசு ஒன்று அமைக்கப்படும் வரை பதவியில் இருக்கும்படி ஆளுநர், முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டார். [உ-எ]

# யாரிடம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இலங்கையில் வெளிநாடுகள் தலையிட இந்தியா அனுமதிக்காது என்றும் திரு. சுக்லா கூறியிருக்கிறார்.

இலங்கை தான் விரும்பிய வெளிநாடுகளிடமிருந்து உதவி பெற உரிமை உண்டு. யாரிடமிருந்து உதவி பெறுவது என்பது பற்றி வேறெவரும் எமக்குச் சொல்லத் தேவையில்லை.

எனினும் நல்ல அயலுறவை கருத்திற் கொண்டு இந்தியாவுக்கு எதிராக எவரும் எமது மண்ணில் இருந்து செயற்பட இடமளிக்கப்படமாட்டாது என்று உறுதி மொழியை மட்டும் இந்தியாவுக்கு நாம் அளிக்கிறோம் — என்றார். [உ-எ]

# 600 ஊழியர் வேலையிழப்பு!

யாழ்ப்பாணம், டிச. 28

யாழ். மாவட்டத்தில் மிருசுவில் முதல் காங்கேசன்துறை வரையுள்ள ரயில்வேக் கடமைகளில் கடமையாற்றிய சுமார் அறுநூறு ஊழியர்களும் வேலை இழந்தனர்.

ஜூலை மாதத்துக்குப் பின்னர் இவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை.

(உ-3)

# ராஜீவின் பதவி குறித்து சர்ச்சை

புதுடில்லி, டிச. 28

இந்திய நடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி இந்திரா காங்கிரஸிடம் (ராஜீவிடம்) இருந்து பறிக்கப்பட்டுவிட்டதாக அந்தக் கட்சியின் எம். பிக்கள் நேற்றுச் சபையில் கண்டனம் தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சி அரசாங்கத்துடன் சேரவில்லை என்றும்—

அரசமைப்புச் சட்டப்படி அரசாங்கக் கட்சிக்கு அடுத்தபடியாக கூடுதல் அங்கத்தவர்கள் உள்ள கட்சிக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் — அவர்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அவர்கள் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர். (அ)

# கட்டுத்துவக்கு வெடித்து 2 பேர் காயம்

யாழ்ப்பாணம், டிச.28

வேட்டைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கட்டுத் துவக்கு ஒன்றை நாய் தட்டி விழுத்தியதால் அது வெடித்தது. இதனால் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முத்தையன்கட்டு 3 ஆம் கண்டத்தில் இடம் பெற்றது.

முத்துசெல்வம் [வயது 31], எஸ். ஜெயசீலன் [வயது 16] ஆகிய இருவருமே காயமுற்றனர். இவர்கள் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [உ-15]

# ஆனையிறவு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந்து பரந்தன் பக்கமாக படையினர் வெளியேற முயன்றனர்.

அதனையடுத்தே அப்பகுதியில் கடும் மோதல் மூண்டது.

இந்த மோதலில் எட்டுச்சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

முகாமிலிருந்து முன்னேற முயன்ற படையினர் புலிகளின் கடும் தாக்குதல்களை அடுத்து, தமது முயற்சியைக் கைவிட்டு முகாமுக்குப் பின் வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்த மோதல் நீடித்தது.

பின்னர் மாலை 4 மணியளவில் பொம்மர்கள் ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் மீண்டும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. [உ-5]

# அவ்ரோ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

4 30 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்றும் கட்டுவன் பகுதியில் குண்டுகளை வீசியது.

ஆனால் இந்தக்குண்டுகள் ஈரலிப்பான நிலத்தில் விழுந்ததால் வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் நேற்றுக் காலை பலாலி முகாமிலிருந்து கட்டுவன், குரும்பசிட்டி, மாவிட்டபுரம் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. (உ-68-15)

## வடபகுதியில் உள்ள

# 50வீத ரயில்வே ஊழியர் ஒய்வு பெற விருப்பம்

யாழ்ப்பாணம், டிச. 28

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றும் ரயில்வேப்பகுதி ஊழியர்களில் 50 சதவீதமானவர்கள் ஓய்வுபெறவிண்ணப்பித்துள்ளனர்.

வவுனியாவுக்கு இந்தப் பக்கத்தில் ரயில்வேப் பகுதியில் கடமை புரியும் 660 ஊழியர்களில் 50 வீதமானவர்கள் சுயவிருப்பத்தின் கீழ் இளைப்பாறும்திட்டப்படி ஒய்வுபெற விண்ணப்பித்திருக்கிறார்கள்.

வவுனியாவுக்கு இந்தப் பக்கத்தில் உள்ள ரயில் நிலையங்கள் இயங்காத போதிலும் இப்பகுதி ஊழியர்களுக்கு நவம்பர் மாதம் வரை சம்பளம் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-3]

# இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்கள் அவதி!

யாழ்ப்பாணம், டிச. 28

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்த ஆசிரியர்கள் பலர் தமது பதவியை இழக்கும் ஆபத்துடன், என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றனர்.

கடந்த ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து திருமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து வந்த மக்களில் பெரும் எண்ணிக்கையான ஆசிரியரும் அடங்குவர்.

கடந்த செப்டம்பர் முப்பதாம் திகதி வரை அவர்கள் கல்வித் திணைக்களத்தில் கையொப்பம் இட்டு வந்தனர்,

திருமலையில் நிலைமை சுமுகமடைந்து விட்டதாகக் கூறி அங்கு பணிபுரிந்த சகல அரச ஊழியர்களையும் வேலைக்குத் திரும்புமாறு அரசாங்கம் கேட்டிருந்தது.

ஆனால் திருமலையில் தொடர்ந்து இராணுவக்கெடுபிடிகள் நடப்பதால் ஆசிரியர்கள் திருமலை திரும்பவில்லை. பலர் தமது சொந்த லீவை உபயோகித்தனர். இனி என்ன செய்வது, பதவியை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல் அவதிப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச ஊழியர்களின் கஷ்டங்களை, கொழும்புடன் தொடர்பு கொண்டு ஓரளவேனும் தீர்த்துவைப்பதுபோல—

யாழ். உயர் அரச அதிகாரிகள் தங்கள் விடயத்திலும் உதவ முடியாதா — என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

1991இல் முதலாம் தவணை முதல் தமக்கு மாற்று ஒழுங்கு ஏதாவது செய்து தர ஏற்பாடு செய்யமாட்டார்களா என்றும் கேட்கிறார்கள். (அ)

# மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச.28

யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அடையாள அட்டைகளுடன் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படிமட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. [உ-5]

# பதவிநீக்கம்

சோல், டிச. 28

தென்கொரியாவின் பிரதமர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

புதியவர் ஒருவரை பிரதமராக ஜனாதிபதி றொட்டேஊ நியமித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி கணபதிப்பிள்ளை

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த திருமதி தையல்நாயகி கணபதிப்பிள்ளை 26-12-1990 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரநாதர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி சரஸ்வதிதேவி விநாயகமூர்த்தி [கனடா], திரு: ஸ்ரீபதிதாசன், திரு. சிவசுப்பிரமணியம், திருமதி பேரின்பவல்லி சண்முகம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு கி. கணபதிப்பிள்ளையின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-12 1990 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பேரின்பவல்லி சண்முகம்
[மகள்]

கட்டுடை வளவு,
மானிப்பாய்.

[14885]

## திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்

திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் 27 – 12 – 90இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற க: சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், சிவலிங்கம் [இலங்கை வங்கி, சுன்னாகம்] திருமதி சற்குணலீலாம்பிகை [பூமணி], திருமதி கமலாம்பிகை ஆகியோரின் அன்புத்தாயாரும், சு: அன்னலிங்கம், இ. பாலசிங்கம், திருமதி இராசேஸ்வரி, திருமதி நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் இன்று 28 – 12 – 90 வெள்ளி பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சு. சிவலிங்கம்.
(மகன்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[14886]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## போக்கு மாற...

இலங்கையின் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண வேண்டுமெனில், எல்லா இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும், அந்நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும், காணாமற் போனோர் பற்றிய நிலை குறித்தும் நேரில் கண்டறிவதற்கு ஐ. நா. குழுவுக்கு அனுமதி வழங்க வேண்டும். இலங்கையில், மனித உரிமைகளும், சட்ட ஒழுங்கும் பேணப்படுவதில் முன்னேற்றம் கண்டால் மட்டுமே ஐரோப்பிய சமூக நாடுகள் அதற்கு நிதி உதவி வழங்க வேண்டும்.

இவை யாவும் ஐரோப்பிய சமூக நாடுகளின் நாடாளுமன்றத்தில் ஏகமனதாகந் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் முக்கிய அம்சங்கள். இந்த ஆலோசனைகளையும், நிபந்தனைகளையும் இலங்கை அரசு உடனடியாகக் கவனத்தில் எடுக்கும் அல்லது நிறைவேற்றும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால் இவ்வாறான தீர்மானங்கள், நடவடிக்கைகள் இலங்கையில் நடக்கும் விவகாரங்கள் வெளி உலகுக்கு ஓரளவேனும் தெரியவருகின்றன என்பதைப் புலப்படுத்துகின்றன. அரசாங்கம் நடத்தும் பொய்ப் பிரசாரங்களை வெளி உலகம் முழுக்க முழுக்க நம்பவில்லை என்பதை நிரூபிக்கின்றன. அது மட்டுமல்ல இலங்கை அரசுக்குச் சில நிபந்தனைகளை விதித்து நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்ற கருத்துணர்வு வெளி உலகில் உருவாகியுள்ளது என்பதையும் எடுத்தியம்புகிறது.

இப்போது நடக்கும் யுத்தம் முடியும் வரை, புனர்வாழ்வு, புனரமைப்புக்கென நிதிஉதவி எதுவும் வழங்கப்படமாட்டாது என்று மேற்கத்தைய நாடுகள் நேரடியாகவே கொழும்பு அரசுக்கு அறிவித்திருப்பதும் மேலே குறிப்பிட்ட கருத்துணர்வின் பிரதிபலிப்பே.

பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு நாடு; தனது மக்களுக்குப் போதிய உணவை வழங்குவதற்குத் தானும் சொந்தக் காலில் நிற்பதற்குத் திராணி அற்ற, வலுக் குறைந்த நாடு; இலங்கை. ஆனால் ஓர் இனத்தை அடக்கி ஆள்வதற்காக மாதாந்தம் கோடி கோடியாகப் பணத்தைச் செலவிடுகிறது. அதற்கான பணம் எங்கிருந்து வருகிறது?

நிச்சயமாக, உலக நாடுகள் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்குமென மனம் இரங்கிக் கொடுக்கும் பணம் ஊட்டும் பலத்தினால் தான், அந்தப் பலம் தரும் துணிவினால் தான் அது தனது போக்கில் போகிறது. உலக அபிப்பிராயத்தையும் அசட்டை செய்து கொண்டு தனது எண்ணத்தை நிறைவேற்ற இலங்கை அரசு, கங்கணம் கட்டி நிற்பதற்கு ஆதாரமே கடன்படும் பணம் தான்!

தாம் வழங்கும் கடன்களால், நிதி உதவிகளால் இலங்கை அரசு தலைக்கேறி நிற்கிறது என்பதை வெளி உலகம் இப்போது ஓரளவேனும் புரியத் தொடங்கியுள்ளது எனக்கொள்ளலாம். அந்தக் கருத்துணர்வு ஓர் அலையாகி வீச்சுடன் எழுமானால் இலங்கை அரசு தனது போக்கை மாற்றிக் கொண்டே ஆக வேண்டும். அப்படி ஒரு சூழ்நிலை எப்போது வரும்?

## காரைநகரில் மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், டிச. 28

காரைநகரில் எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் மணிவாசகர் விழா நடைபெறுகிறது.

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் விழா நடைபெறும்.

முதல் நாள் விழா பிற்பகல் 1.30 மணிக்கு மணிவாசகர் சபைத்தலைவர் திரு. செ. தேவதாசன் தலைமையில் ஆரம்பமாகும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 31 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு வட மாநில கல்விப் பணிப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். [இ]

# தனியார் துறையினர் வாங்கிய மருந்து கொழும்பில் தேக்கம்

## பாவனைக்குரிய காலம் பிந்தும் ஆபத்து

யாழ்ப்பாணம், டிச. 28

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தனியாரினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள், கொழும்பிலேயே தேங்கிக் கிடக்கின்றன.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

யாழ். மாவட்டத்தில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய தனியார் வைத்திய சாலைகளும், தனியார் மருந்துச்சாலைகளும் கொழும்பில் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்திருந்தன.

கப்பல் மூலம் இவற்றைக் கொண்டு வரமுடியும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இவர்களிடம் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

ஆனால் இவற்றைக் கொண்டு வர கூட்டுப்படை தலைமையகத்தின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

பல லட்சம் ரூபா கொடுத்து வாங்கிய மருந்து வகைகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதால் அவை பாவனைக்குரிய காலம் பிந்தி வீணாகும் ஆபத்து உருவாகி வருகிறது. [இ-3]

## தமிழீழ இணக்க மன்றுகளில் புதிய நடைமுறை அமுலாகும்

யாழ்ப்பாணம், டிச. 28

தமிழீழ இணக்கமன்றுகளில், பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தாக்கல் செய்வதில் புதிய நடைமுறைகள் அமுலுக்கு வரவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இது அமுலுக்கு வரும் என தமிழீழ இணக்க மன்று தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இதன்படி -

★ இணக்கமன்றுகளில் வழக்குத் தாக்கல் செய்ய கட்டணமாக ரூபா 50 அறவிடப்படும். ஆனால் வழக்குத் தாக்கல் செய்பவர் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட வாழ்க்கைத் தரம் உடையவரானால் கட்டணமாக ரூபா 10 செலுத்த வேண்டும்.

★ வழக்குத்தாக்கல் செய்பவர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவராகவும், கணவரைப்பிரிந்துவாழ்பவராகவும், அல்லது கணவரை இழந்து வாழ்பவராகவும், அல்லது பாலியல் ரீதியாக ஏமாற்றப்பட்ட பெண்களாகவும் இருப்பின் வழக்குத்தாக்கல் செய்ய கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

★ வழக்குத்தாக்கல் செய்வதற்கான முறையீட்டுப் படிவம் ஒன்றுக்கான கட்டணம் 2 ரூபா ஆகும். (இ-5)

## பருத்தித்துறை இலங்கை வங்கி விவசாயிகளுக்குக் கடன்

பருத்தித்துறை, டிச. 28

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை, விவசாயிகளுக்கான கடன் வகைகளை வழங்க முன்வந்துள்ளது.

விவசாயக் கடனைத் திரும்பச் செலுத்தியவர்களுக்கே விவசாயக்கடன் மீண்டும் வழங்கப்படவுள்ளது.

புலோலி கமநல சேவைப் பிரிவில் தற்போது வெங்காயச் செய்கை மேற்கொண்டுள்ள முப்பத்தைந்து விவசாயிகளை வங்கி தேர்ந்தெடுத்துள்ளது.

இவர்களுக்குக் கடனாக 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

அண்மையில் 35 விவசாயிகளுக்கு முதற்கட்டக் கடனாக 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணமாக வழங்கப்பட்டது என இலங்கைவங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் தெரிவித்தார். (இ-118)

## வைகுந்த ஏகாதசி

யாழ்ப்பாணம், டிச. 28

அளவெட்டி நாகேஸ்வரம், ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில், இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம், சுவர்க்க வாசல் வைகுந்த ஏகாதசி விழா நடைபெறுகிறது.

அவ்வேளை, நாலாயிரம் பிரபந்தம் ஓதும் நிகழ்ச்சியும் இடம் பெறும். (அ)

## ஓய்வூதியம் பெறுவோர் சங்கம்

மயிலணி, டிச. 28

வலி. வடக்கில் ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் ஒன்று அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (இ-69)

## உணவு முத்திரை பொருள் விநியோகம்

மயிலணி, டிச. 28

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் தனது கிளைகளின் மூலம் 5 ஆவது உணவு முத்திரைப் புள்ளிகளுக்கான உணவுப் பொருள்களை விநியோகிக்கிறது. ஜனவரி 5ஆம் திகதிவரை இவை விநியோகிக்கப்படும்.

மேலும் 2 ஆம் கட்ட நிவாரணப் பொருள்கள் அரிசி மூடைகள் சங்கத்துக்கு வந்து சேர்ந்ததும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்று சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். [இ-89]

## சர்வோதயம் திருமலை அலுவலகத்தை அநுராதபுரத்துக்கு மாற்ற முயற்சி

யாழ்ப்பாணம், டிச. 28

சர்வோதயம் அமைப்பின் பணிகளை வடக்கு - கிழக்கில் செய்வதற்கெனத் திருகோணமலையில் இயங்கிய பிராந்திய அலுவலகத்தை அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

அதற்கான முதல் நடவடிக்கையாக பதவியாவையும் வடக்கு - கிழக்கு பிராந்தியத்தின் கீழ் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வு அளிப்பதற்கென்று நிதி வழங்கும் நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் பெரும்பான்மை இனத்தினருக்கே பெருமளவில் செலவிடப்படுவதாக கண்காணிப்புக் குழு இவ்வருடம் அக்டோபர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டி உள்ளது.

சர்வோதயத்தின் இனப் பாகுபாடான நடவடிக்கைகள் குறித்து கண்காணிப்புக் குழுவுக்கு தகவல் கொடுத்ததற்காகமுகாமைத்தவச் சபையில் அங்கம் வகித்த திரு. ஜெகா செந்தில்நாதனும், திருமலையில் இயங்கும் பிராந்திய அலுவலக இயக்குனர் திரு. எம். இராஜசிங்கமும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஸ்தாபனத்தின் புனர்வாழ்வுப் பிரிவின் கணக்காளர் திரு. அசோகன் ராஜினாமாச் செய்துள்ளார்.

இத்தகைய ஒரு பின்னணியில் புதிய முகாமைச் சபை ஒன்று உருவாக்கப்பட்டு நிதி வழங்கும் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டு வேறு இரண்டு தமிழர்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளுடன் தங்கியிருந்த போராளிகளுக்கு தனிமுகாம்

சென்னை, டிச. 28

தமிழ் நாட்டில் முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகளுடன் தங்கியிருந்த போராளிகள் பிரித்தெடுக்கப்பட்டு விசேட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களை விட்டு வெளியேறி நடமாடுவதற்கு இப்போராளிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

விசேட முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ள தமிழ்ப் போராளிகளின் எண்ணிக்கை 1480 என்று முதலமைச்சர் கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [இ-எ]

# களஞ்சியத்திலிருந்து உலர் உணவு எடுத்துவர லொறிகள் இல்லை

## மட்டக்களப்பில் ப.நோ.கூ. சங்கங்கள் திண்டாட்டம்

மட்டக்களப்பு, டிச. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதிய லொறிகள் இல்லாததால், அகதிகளுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்குமான உலர் உணவுப் பொருள்களை எடுத்து வருவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்கள் 3 முதல் 5 நாட்கள் அரச உணவுக் களஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

மட்டக்களப்புக் களஞ்சியத்திலிருந்து உலர் உணவுப் பொருள்களை எடுத்துவர ப. நோ. கூ. சங்கங்களிடம் ஓரிரு லொறிகள் மட்டுமே உள்ளன.

நிவாரணப் பொருள்களை எடுத்து வர தனியார் லொறிகளைக் கூட வாடகைக்கு அமர்த்த முடியாத நிலையில் ப. நோ. கூ. சங்கங்கள் உள்ளன.

[illegible] லொறிகளுக்கு [illegible] மைலுக்கு தலா 25ரூபா வீதம் புனர்வாழ்வுப் பகுதியினரால் கட்டணம் செலுத்தப்படுகிறது.

பாதுகாப்பு காரணமாக தனியார் லொறி உரிமையாளர்கள் லொறிகளை வாடகைக்கு வழங்க முன்வருவதில்லை.

உலர் உணவுப் பொருள்களை எடுத்து வர லொறிகள் இல்லாததால் வாகரை பிரி[illegible] 2ஆம் கட்ட நிவாரணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## சோவியத் உப ஜனாதிபதி ஜயனோவ்

மாஸ்கோ, டிச. 28

சோவியத் யூனியனின் உப ஜனாதிபதியாக திரு. ஜயனோவ் நியமிக்கப்பட்டார்.

சோவியத் நாடாளுமன்றம் தமக்கு வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் இந்த நியமனத்தைச் செய்தார். [இ-எ]

## அமெரிக்காவுடன் பேச ஈராக் புதிய முயற்சி

பக்தாத், டிச. 28

வளைகுடா நெருக்கடிக்கு சமரச தீர்வு காணுமுகமாக அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கான புதிய முயற்சி ஒன்றை ஈராக் மேற்கொண்டிருக்கிறது.

பக்தாத்தில் அரச அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டதாக பி. பி. சி. தெரிவித்தது.

பக்தாத்தில் உள்ள அமெரிக்க அதிகாரிகளுடன் ஈராக் அதிகாரிகள் இது சம்பந்தமாக தொடர்பு கொண்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

## உலக சதுரங்க சாம்பியன்

மாஸ்கோ, டிச. 28

உலக சதுரங்க சாம்பியனாக கரிகஸ்பரோவ் வெற்றியீட்டினார்.

அனரொலிகர்போவை அவர் தோற்கடித்தார். இருவரும் ரஷ்யப் பிரசைகள் ஆவர்.

சாம்பியன் போட்டி மூன்று மாதங்களாக நடந்து கடந்த புதன் கிழமைமுடிவடைந்தது [இ-எ]

## ஆசிய கிண்ண கிரிக்கெட்

ஆசிய கிண்ணத்திற்கான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஒரிஸ்ஸாமாநிலம் கட்டாக் நகரில் இந்திய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையே நடைபெறுகிறது [இ-எ]

## அழுதால் அவனைப் பெறலாம்

திருவெம்பாவை மார்கழி நீராடலைக் குறித்து எழுந்த பனுவல். தண்ணீர் குளியலோடு கண்ணீர்க் குளியலையும் வலியுறுத்துவது திருவாசகம். அழுதால் உன்னைப் பெறலாமே என்பது அதன் மகுடவாசகம்.

நானும் பொய். என் நெஞ்சும் பொய். என் அன்பும் பொய். ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்று மணிவாசகரும் அழுது ஐயனைப் பெறச் செல்கின்றார்.

அழுத பிள்ளை பால் குடிக்குமல்லவா? தாயைப் பார்த்துக் குழந்தை அழுவது போல், பால் நினைந்தூட்டும் தாயினும் பெரிய தாயான ஈசனை நோக்கி அழுவது ஆனந்தத் தேன் சுவைப்புக்கு வழியாகும்.

சீர்காழியில் தோன்றிய ஞானக் குழந்தை அம்மே! அப்பா! என்று தோணியப்பரை நோக்கி அழுது பெற்றபலன் ஞானத் தமிழாய் திருநீற்றின் செம்மையாய் திருவைந்தெழுத்தாய் நிற்பதை நாம் அறிவோம். இதனை 'காலம் பெற அழுதார்' 'அழுது உலகை வாழ்வித்தார்' என்று சேக்கிழார் பாராட்டுவார். அழுவதன்றி மற்று என் செய்வேன் பொன்னம்பலத்து அரசே என்று கேட்டார் மாணிக்கவாசகர்.

திருவடிப் பேற்றிற்காக அழுத அன்பருக்கு இறைவன் அருள் செய்தான். நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி என்றும், மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் என்றும், கழலிணைக் கண்டேன் களிகூர என்றும், கழல் காட்டி நாயேனை ஆட்கொண்டார் என்றும், மணிவாசகர் குறிப்பிடுவனவற்றால் அவர் அழுது கேட்டது கிடைத்தமைபுலனாகிறது.

### திருவெம்பாவை சிறப்பம்சம்

வேண்டப்படுவதை அறிபவனும் வேண்ட முழுதும் தருபவனுமாகிய குறைவிலா நிறைவை நோக்கி நாமும் அழுது வேண்டும் பரிசுகளைப் பெறுவோம்.

புலவர்
ஈழத்துச்சிவானந்தன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்'' இல; 856 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

### மில்க்வைற்

நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபட வேப்பெண்ணை பாவித்து விளக்கெரியுங்கள் கண்ணுக்கும் குளிர்ச்சி. போத்தல் ரூபா 80/- மட்டும். திருநெல்வேலி, இணுவில், யாழ். நகர் நவீன, சந்தை அண்ணாகோப்பிக் கடையிலும் விற்பனையாகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். (C/5570]

### நாற்றுக்கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன எலுமிச்சை நாற்றுக் கன்றுகள் விற்பனைக்குண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (C/5569]

### அறை வாடகைக்குண்டு

பெண் பிள்ளைகள் தங்குவதற்கு ஏற்ற அறை வாடகைக்குண்டு. 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். [14878]

### கல்வி

தட்டெழுத்து, சுருக்கெழுத்து, அலுவலக நடைமுறைகள், கணக்கியல், ஆங்கிலம் சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு. S. T. C. A, 149(37), சிவன் பண்ணை வீதி, (ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் பின் வீதி), யாழ்ப்பாணம். [15291)

### வைத்திய சேவை

சம்பந்தன் வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம் [யாழ். ஆஸ்பத்திரி, பூபாலசிங்கம் புத்தக சாலை முன்பாக, சாந்தி தியேட்டர் அருகே] முன்பு நடைபெற்ற இடத்தில் வழமைபோல் நடைபெறுகின்றது. [15295]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15280)

# தற்காலிக இடமாற்றம்

## யாழ்ப்பாணம் சூ பலஸ்

மேற்படி ஸ்தாபனம் 51, கஸ்தூரியார் வீதியில் இருந்து தற்காலிகமாக திருநெல்வேலி சென்றல் நேர்ஸிங்கோம் சந்திக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை கிறிஸ்மஸ் - புதுவருட வாழ்த்துக்களுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம். எம்மிடம் சகல விதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ளலாம். (15294)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
13 - 4 - 1930

உதிர்வு:
28 - 11 - 1990

திதி: 28 - 12 - 1990

## அமரர் தா. சி. தாமோதரம்பிள்ளை

(விவாகப் பதிவுகாரர் - வடமராட்சி)

பொல்லாத உலகினிலே நில்லாமற் போனவரே - நீர்
இல்லாது எம்மனது கல்லாகிப் போனதுவே
இல்லாத ஒன்றில்லை என்றே நாம் வாழ்ந்தோம் - நீர்
இல்லாத புல்லாகிப் போனோம் நாமின்றே
மெல்லான சொல்லாலே மேதினியில் வளர்ந்தீர்-இன்று
மெல்லவே சென்றுவிட்டீர் எமை விட்டே
எல்லோரும் இவ்வாறே இன்னுலகு செல்வதனால்-தமிழ்ச்
சொல்லாலே வேண்டுகின்றோம் உம் ஆத்ம சாந்திக்கே

என்றும் உம் நினைவுடன் நிற்கும்
மனைவி, மக்கள், மருமகன், பேரன், மாமி.

'சிவகுடில்'
சரவெட்டி. [15196]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:-
30 — 11 — 61

மறைவு:-
30 — 12 — 87

திதி:- ஏகாதசி
28 — 12 — 90

## கணேசன் சண்முகம்

(சின்னபாபு)

மூன்று ஆண்டு காலம் ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பும், நினைவுகளும் எங்கள் மனதை விட்டு என்றும் மறையாது.

துயருடன் நினைவு கூரும்
பப்பா, அம்மா, அண்ணா, அண்ணி,
அக்கா, அத்தான், ஆசை மருமக்கள்.

108, பிறவுண்வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (15275)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்





## பொன்னர் சிவராசா

(முன்னாள் பிரபல வர்த்தகர்)

இறுதிக் கிரியைகளின் போது அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய ஐயனாரைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்.

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம். (15271)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

மண்ணில்:
08 - 06 - 1942

விண்ணில்:
28 - 11 - 1990



அல்வாய் வடக்கு கணபதிப்பிள்ளை - சிவகாமி தம்பதியின் புதல்வன்

## செல்வமாணிக்கம்

(மாணிக்கம்)

(முன்னாள் யாழ். ஸ்ரான்லி வீதிமொடேண் எலெக்ரிக்கல் வெல்டேஸ் உரிமையாளர்)

அன்னாரது 31ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியையும் அவரது இல்லத்தில் 28 - 12 - 1990 வெள்ளிக்கிழமை நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

மனைவி, வசந்தா,
சகோதரன், சகோதரிகள்,
மைத்துனர்கள்.

ஆழக்கிணற்றடி,
அல்வாய் மேற்கு. [15286]

# நிவாரணம் வழங்க மகஜர்

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் தொழில் இழந்து, பாதிப்படைந்துள்ள கட்டட-தச்சுத் தொழிலாளர்களுக்கு - விசேஷ துயர் துடைப்பு நிவாரணம் வழங்க வேண்டும்.

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர்சங்கம், யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு கோரி உள்ளது.

தொழில் ரீதியாக பாதிப்படைந்துள்ள கட்டடத் தொழிலாளர் சமுதாயத்துக்கு, ஏதுவான முறையில் உதவி அளிப்பது இன்றியமையாததாகும்.

மீனவர்களுக்கு தற்போது வழங்கப்படுவது போன்ற விசேஷ நிவாரணத்தை இவர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று மேலும் கோரப்பட்டுள்ளது. [இ-6]

# சர்வோதயம் திருமலை......

[3 ஆம் பக்கம் தொடர்ச்சி]
புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் பிராந்திய அலுவலகத்தை அனுராதபுர மாவட்டத்துக்கு மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு வடக்கின் எல்லை மாவட்டத்தில் உள்ள அரச உயர் அதிகாரி தனது முழு ஆதரவையும் வழங்கி வருகிறாராம்.

இதேவேளை சர்வோதயம் திருகோணமலையில் அகதிகளுக்குக் கட்டிக் கொடுத்த 49 வீடுகளில் ஒரு வீடு மட்டுமே தமிழருக்கு வழங்கப்பட்டது.

ஏனைய வீடுகள் சிங்களவர்களுக்குக் கொடுக்கப்பட்டதால், அவற்றை விரைவில் கட்டி முடிக்க உதவுமாறு விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மரணமான திருமலை இணைப்பதிகாரி பிரிகேடியர் விஜேரத்ன மேற்கு மாகாணமுதல்வரைக் கேட்டிருந்தார்

இதற்கிடையில் சர்வோதயத்தின் யாழ்ப்பாணக் கிளையின் கணக்கினை மறு ஆய்வு செய்யுமாறும் கண்காணிப்புக் குழுவின் அக்டோபர் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ]

# பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிலையம்

தெல்லிப்பழை

ஆனி மாதத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த சீரற்ற நிலைமையினால் இடைநிறுத்திவைக்கப்பட்ட மாணவ குடும்ப நலசேவையாளர் பயிற்சி மீண்டும் 01-01-1991 தொடக்கம் இணுவிலில் ஆரம்பிக்கப்படுகின்றது. சகல மாணவிகளும் 1-1-91 தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தவறாது சமுகமளிக்கவும்.

சுகாதார வைத்திய அதிகாரி தெல்லிப்பழை.
(சி/5570)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடங்கள்

1. பெண்கள் விடுதிப் பொறுப்பாளர் பதவி

மேற்படி சங்கத்தின் பெண்கள் விடுதியில் தங்கியிருந்து பிள்ளைகளை பராமரித்து, அவர்களின் கல்வி அறிவு ஒழுக்கங்களை மேம்படுத்திச் சேவை செய்ய விரும்பும் தகுதியுடைய, 35 வயதிற்கு குறையாத பெண்கள் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

2. சமையலறைப் பொறுப்பாளர் பதவி

சங்கத்தின் சமையலறை வேலைகளைக் கவனிப்பதற்குச் சைவ உணவு தயாரிப்பதில் அனுபவமும் நிர்வாகத்திறனுமுடைய 35 வயதுக்குக் குறையாத பெண்கள் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் தகுதியடிப்படையில் நேரில் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் 1991 ஜனவரி. 10 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைத்தல் வேண்டும்.

தலைவர்.
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி/5567)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## மரிசலின் றதீஸ்

தோற்றம்:
3 - 2 - 1968

வீரமரணம்:
28 - 11 - 1990

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 28 - 12 - 90 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நாரந்தனை சம்பேதுரு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்கள்,
மைத்துனர்கள், நண்பர்கள்.

ஊர்காவற்றுறை,
நாராந்தனை தெற்கு. (15299)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org